லாலா சோப்

பிரகாச சலவை! பளிச்சிடும் வெண்மை! ஈழம் எங்கும் கிடைக்கும்

லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 22 ரபி அவ் 15 இதழ் 24
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6 3-78

## படமாளிகை முன் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள ஒரு படமாளிகைக்கு முன் நேற்றுமாலை நடந்த சம்பவம் ஒன்றில இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு சிறு காயமேற்பட்டது.

கல்வீச்சுச் சம்பவமும் இடம்பெற்றது.

ஒருவர் கள்ளமார்க்கட்டில் படத்திற்கான டிக்கட் விற்றதாகவும் இதைப்பொலிஸார் ஒருவர் தடுத்தபோது அவர் ஒரு கோஷ்டியுடன் வந்து பொலிசாரைத்தாக்கியதாகவும் கூறப்படுகிறது. பின்னர் பொலிஸ் கோஷ்டியொன்று ஸ்தலத்துக்குச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஒருவர் சந்தேகத்தின் பேரில பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

# சீனவெடியைமக்கள்வீசியதும்

# ‘குண்டு’என கத்தினர் ஏஎஸ்பி!

## எரியும் டயர்களை பொலிசார் கடைகளுக்குள் வீசினர்

### சன்சோனி விசாரணை கமிஷன்முன் முன்னாள் இராணுவ வீரர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

“மக்களை நாய்போல் பொலிசார் ஏன் கட்டுத் தள்ளுகிருர்கள் என்பதை நேரில் அறிய விரும்பி ஆகஸ்ட் 16ம் தேதி பெரிய கடையிலுள்ள ராஜா கட்டடத்திலுள்ள உச்சிமாடிக்கு ஏறி, யாழ்ப்பாண நகரில் நடைபெறும் சம்பவங்களை அவதானித்தேன்”.

• “எரிந்து கொண்டிருந்த டயர்களை பொலிசார் தூக்கி, கடைகளுக்குள் போடுவதைக்கண்டேன்.

• ‘அங்கு வந்த பல பொலிசாருக்கு துப்பாக்கியைப் பிடித்து சரியாக சுடத்தெரியாதென்பதை அவதானித்தேன்.

• “எரிந்த கடைக்குள் ‘மக்கள் சீனவெடியை வீசியபோது அது வெடித்ததும், ஏ எஸ் பி “குண்டு வீசிவிட்டார்கள்” என்று கூறிச் சத்தமிட்டார்.

முன்னாள் இராணுவ வீரர் இன்னத்தம்பி பூபாலசிங்கம் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர். பூபாலசிங்கம் மேலும் கூறியதாவது:

“நான் 52ம் ஆண்டு முதல் 64 ஆண்டுவரை இராணுவத்தில் இருந்தேன்'.

ஆகஸ்ட் 16ம் தேதி எனது மகனை யாழ்ப்பாணம் அனுப்பினேன். அரைமணி நேரத்தில் மேலும் அவர் திரும்பிவரவில்லை. அவரைத் தேடிச் சென்றேன். பெருமாள் கோவிலடியில் சந்தித்தேன். பொலிசார் மக்களை அடித்து விரட்டுவதாகவும், அதனுலேயே வர முடியாமல் போனதாகவும் அவர் கூறினுர் நான் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றேன், நகரத்தில் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்க விரும்பினேன்.

### பொலிசார் கூறியபதில்

வெலிங்டன் தியேட்டர் சந்தியில் மக்கள் ஓடிவந்தார்கள் ஏன் ஓடுகிறீர்கள்? என்றுகேட்டேன் பொலிசார் அடிக்கிருர்கள் என்றுர்கள், நான் பஸ் நிலையம் சென்றேன் அங்கும் மக்கள் ஓடிக் கொண்டிருந்தனர் தற்செயலாகத் தெரிந்த ஒரு பொலிஸ்காரரைச் சந்தித்தேன் ‘ஏன் மக்களை அடிக்கிறீர்கள்?’ என்று கேட்டேன் ‘நீர் உமது வேலையைப் பாரும்’ என்றுகூறினுர் ஏன் வந்ததாக என்னிடம் கேட்டார் நான் மார்க்கட்டுக்கு சாமான்வாங்க வந்ததாகக் கூறினேன்.

அங்கிருந்து மார்க்கட்டுக்குப் போனேன். என்ன நடக்கிறதென்பதைப் பார்க்க ஒருமாடிக் கட்டிடத்திற்கு சென்றேன். காவலாளியை கெஞ்சி மன்றாடிக் கேட்டு உயர்மாடிக்கு சென்று யன்னலால் பார்த்தேன் யாழ். நகரம் முழுவதும் தெரிந்தது கொட்டடியிலிருந்தும் பொலிஸ் நிலையம் வரை தெரிந்தது

### யுத்தகளம்

பெரிய ‘ரக்’ ஒன்று முனீஸ்வரன் வீதியால் வந்தது ஆஸ்பத்திரிவீதியால்வந்து சுபாஸ் கபேக்கு முன் நின்றது அங்கு வீதியில் தடைசெய்யப்பட்டிருந்தது அவர்கள் றீகல் தியேட்டர் பாதையால் சென்று கொட்டடிக்கு சென்றனர், அங்கு ரக்கை மறித்துவிட்டு றைபிளுடன் இறங்கினுர்கள் யுத்தகளத்திற்கு செல்வது போல் அணிவகுத்து வந்தார்கள் மக்கள் நாலா பக்கமும் ஓடினுர்கள் சி எஸ் கே சந்தியில் ரயர் எரிக்கப்பட்டிருந்தது சார்ஜன்ட் ஜெயவர்த்தனவும் சப் இன்ஸ்பெக்டர் டீனும் அந்த கோஷ்டியில் வந்தனர் எஸ் ஐ இரண்டு கான்ஸ்டபிளுக்கு என்னவோ சொன்னதைப்பார்த்தேன்.

2 கான்ஸ்டபிள்களும் இரும்பொன்றினுல் எரிந்துகொண்டிருந்த டயரை தூக்கி பழைய மார்கட்டிற்குள் போட்டார்கள் பலகடைகளுக்குள் போட்டார்கள் பாய்க்கடை, கடைகம், பெட்டி, எல்லாம் எரியத் தொடங்கியது. பின்னுக்கு மக்கள் நின்று கத்திக்கொண்டுநின்றுர்கள்,

### கடையை உடைத்தனர்

சார்ஜன்ட் ஜயவர்த்தனமுறப் பக்கமாக வந்தார் போத்தல்கள் உடைபட்டுக் கேட்டது கடையை உடைக்கிறுர்கள் என்று அறிந்துகொண்டேன்.

### தீ மூட்டினர்

பின் அப்பால் சென்று போறேஸ் ஸ்ரோசிற்கு தீமூட்டினுர்கள் விசேட துப்புதுலக்கும் பிரிவில் சேர்ந்த ஒரு சார்ஜன்ட்,டயரைக்கொண்டுவந்து அக்கடைக்கதவு அருகில்போட்டார் பின் மற்றொரு பொலிஸ்காரர் வீதியில் எரிந்துகொண்டிருந்த டயர் ஒன்றை கொண்டுவந்து அதற்குமேல் போட்டார் டயர்களை இரும்பு கம்பியால் தூக்கிவந்தனர் மக்கள் நெருப்பை அணைக்க முயற்சித்தார்கள் ஆனுல் பொலிசார் அதனை தடுத்துக் கொண்டுநின்றனர்.

இந்த அட்டூழியங்களை பொறுக்க முடியாத பொது மக்கள் மற்றொரு கடையிலிருந்து சீனவெடிகளை எடுத்து வந்து எரியும் கடைக்குள் போட்டதும் பட்...பட்...பட் என்று வெடித்தது.

### குண்டு வீசினராம்

அங்கு நின்ற ஏ எஸ் பி

(5-ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு ஏற்பாடுகள் பூர்த்தி!

(வண்ணார்பண்ணை)

கச்சதீவு உற்சவகாலத்தில் அங்கு கடமையாற்றுவதற்கான அரச ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுவிட்டன.

தற்காலிக அரசாங்க அலுவலகங்களை கச்சதீவில் அமைப்பதற்காகத் தெரியப்பட்ட ஒப்பந்தகாரர் திரு க குணரத்தினம மின்சாரவிளக்குகளுக்கான ஒப்பந்தகாரர் திரு ம கணபதிப்பிள்ளை ஆகியோர் அங்கு சென்று கடமையாற்றுவதற்கான அனுமதிப்பத்திரங்களை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு சோ. அமிர்தலிங்கம் வழங்கியுள்ளார்.

கச்சதீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், அரசாங்க அதிபர் அலுவலகம், சுங்க அதிகாரிகள் அலுவலகம்,பொலிஸ் அதிகாரிகள் அலுவலகம், சுகாதார அலுவலகம், நீதிமன்றம் போன்ற பிரதான அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோவில்மூப்பர் கோவில்கட்டளைக்குரு ஆகியோர் 8ம் திகதி புறப்படவிருக்கின்றனர் இங்கு கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்ட பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர் திரு பி எல் பற்றிக் தலைமையில் 8ம் திகதி புறப்படவிருக்கின்றனர்

## கிளிநொச்சித் தொகுதிக்கு மேலதிகமாக ரூ.10 லட்சம்

[வண்ணார்பண்ணை]

விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னிட்டும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு வசதிகளுக்காகவும் கிளிநொச்சித் தொகுதிக்கு மேலதிகமாக பத்து லட்சம் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட புதிய அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் தலைமையில் நடந்த மாவட்டவரவு-செலவுத்திட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவர் உட்பட யாழ்.

(6ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

### 1977 ஒக/செத். சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்கான ஆணைக்குழு

ஆணைக்குழுவுடன் எழுத்து மூலம், ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ள (எந்த ஒரு ஸ்தாபனத்தினுலும் பிரதிநிதித்துவம் செய்யப்படாத) எந்த ஒரு நபரும் எழுத்து மூலமான தமது முறைப்பாட்டில் குறிக்கப்பட்ட இடத்தைக் கருதாமல் யாழ்ப்பாணத்தில் ஆணைக்குழுமுன் நேரடியாக சாட்சியமளிக்க விரும்பினுல் உடனடியாக கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருடன் நேரடியாகவோ, தபால் மூலமோ முறைப்பாட்டின் பிரதி ஒன்றுடன் தொடர்பு கொள்ளும்படி இத்தால் கோரப்படுகின்றுர்.

விசாரணை ஆணைக்குழு அலுவலகம்,
பொதுநூலக கேட்போர் கூடம்,
யாழ்ப்பாணம், 2 3 1978

8684

ஆணையாளர் கட்டளைப்படி.
ஆர் எஸ் செசுப் ரமணியம்
உதவி செயலாளர்.

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் பஜார் பகுதியில் அடைவுகடை நடத்துவதற்கு இடம் அல்லது கடை தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 8678 C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 8678

கணிதம்-பௌதிகம் உயர் வகுப்புகளுக்கு கற்பிக்கதற்குரிய பட்டதாரிகள் தேவை. தராதர, விபரங்களுடன் 10-3-78க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு 8676

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் எழுதுவினைஞராகவும், காசாளராகவும் கடமையாற்ற கணக்கெழுதுவதில் அனுபவமும் ஆங்கிலம் தெரிந்தவரும், தட்டச்சு அனுபவம் உள்ளவருமான ஒருவர் தேவை. விண்ணப்பக்காரர் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தை அனுப்பவும் விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி, யாழ் மோட்டார் ஸ்ரோஸ், 108/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8651

பாதுகாப்புச் சேவைக்குப் பாதுகாவலர்கள் உடன் தேவை. ஓய்வு பெற்றவர்களும் வரலாம். 6-3-78 தொடக்கம் 8-3-78 வரை காலை 9மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நற்சாட்சிப் பத்திரங்களுடன் தெல்லிப்பழை தபாற்கந்தோருக்கு அருகாமையிலுள்ள பாதுகாப்புச்சேவை அலுவலகத்திற்கு நேரில் வரவும். 8686

நெசவு வேலையில் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள பெண்கள் தேவை சம்பளம் ஒன்பது ரூபாய் வழங்கப்படும். வெளியூர் பிள்ளைகளுக்கு தங்குமிட வசதியுண்டு. 10ந் திகதிக்கு முன் நேரில் வரவும். தவகுமாரன் நெசவு நிலையம் திருமதி க. க. முருகேசு வியாவில் காரைநகர். 8683

அச்சுக்கோக்கவும், பைண்டிங்வேலை செய்யவும், பிளற்றன் மெசினில் அடிக்கவும் தெரிந்த ஒருவர் தேவை 18-3-78 க்கு முன்விண்ணப்பிக்கவும். முகாமையாளர், குகன் அச்சகம், தெல்லிப்பழை. 8691

### விற்பனைக்கு

பனைமரங்கள், கிலாகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. டொலர் அலுமினியம் தொழிற்சாலை, மாவிட்டபுரம். 8664

நீம் சுகாதாரதூபம், லிவ்ஸ்நானப்பவுடர் ஆகியவற்றை யாழ்ப்பாணம் நவீன சந்தை அண்ணா கோப்பி விற்பனை நிலையத்திலும் சுன்னாகம் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8689

சுண்டிக்குளி, ஈச்சமட்டை றோட்டில் 4லாச்சம் 15 குளி உள்ள கப்பித்தான் வளவு என்னும் குடியிருப்பு நிலம் விற்பனைக்குண்டு. தரகர்கள் இல்லை. விபரங்களுக்கு திருமதி எம்.எம் ஐ. தேவநாதன், 20 டேவிட்றோட், யாழ்ப்பாணம். 8687

### இனம்

திருக்கேதீஸ்வர வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர வியாபாரநிலையத்தில் அண்ணா கோப்பி சேவாரின், அண்ணாபற்பொடி ஆகியவற்றை வாங்குபவர்களுக்கு "...." ஒன்று இலவசமாக கொடுக்கப்படும். 8685

## அதிகார துஷ்பிரயோகம்:

# பாதுகாப்புப் படைமீதான புகாரை விசாரணை செய்ய 'ஒம்புட்ஸ்மான்'

## சன்சோனிக்கமிஷன்முன் யோகேந்திரா

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப் படையினரான விமானப்படை, இராணுவம், கடற்படை, பொலிசாரும் அரசாங்க ஊழியர்களும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதுபற்றிய புகார்களை விசாரணை செய்வதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் 'ஒம்புட்ஸ்மான்' நியமிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த முற்போக்கு தமிழர் இயக்கத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு கூறினார். திரு துரைசுவாமி மகஜர் ஒன்றையும்சமர்ப்பித்தார்.

திரு யோகேந்திரா துரைசுவாமி மேலும் கூறியதாவது.

சிங்கள தமிழ் மாணவர்கள் ஒன்றாகப் பழகும்விதத்தில் சில பாடங்களை ஒன்றாகக் கற்பிக்கவும் சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் ஒன்றாகப் பழகவும் ஏற்பாடு செய்ய வேண்டும். சாரண இயக்கம் போன்றவை இதற்கு உதவலாம்.

சில சரித்திர நூல்கள், மறுபரிசீலனை செய்யப்பட்ட வேண்டும். சில நூல்களில் சரித்திர சம்பவங்களைபற்றி திரித்துக் கூறப்பட்டுள்ளது. இது இனப்பாகுபாட்டுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். அத்துடன் தேசிய ஒற்றுமையையும் சிதைத்து விடும், இதே போன்று சில பத்திரிகைகளும் புத்தகங்களும் இருக்கிறது. இதனையும் தடுக்கவேண்டும்.

### அரசியல் உரிமை

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கக் கூடாது. நிர்வாகம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதால் ஒவ்வொரு இலாகாவிலும் அரசியல் புகுந்துவிட வழிவகுப்பதாக இருக்கும். இதற்கு வகுப்புவாத அரசியல் புதிய உருவத்தைக் கொடுக்கும்.

### புனர்வாழ்வு அவசியம்

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு அரசு முழு உதவியும் செய்து புனர்வாழ்வு அளிக்க வேண்டும். இப்படியான செய்கைகள் அகதிகள் மத்தியில் எதிர்காலம்பற்றிய நம்பிக்கை உருவாக்குவது மட்டுமன்றி அட்டூழியம் செய்த குண்டர்களின் நோக்கம் இதனால் அழிந்துவிடும்.

இந்நாட்டில் சிங்களம்பேசும் இனத்தவர்களும் தமிழ்பேசும் இனத்தவர்களும் இருக்கின்றனர். அந்நியர் இந்நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன் இரு இனத்தவர்களுக்கும் இந்நாட்டில் தனித்தனியாக ராஜ்யம் இருந்தது. இரு இனத்தவர்களும் நாட்டின் சுதந்திரத்திற்குப் போராடினார்கள்.

இரு இனத்தவர்களிடமும் பல விடயத்தில் ஒற்றுமை காணப்படுகிறது.

சிங்கள தமிழ்மொழிகளில் பல பொதுச்சொற்களை காண முடிகிறது சித்திரை புதுவருட தினம் இருஇனத்தவர்களாலும் ஒரே தினத்தில் கொண்டாடப்படுகிறது. சைவம் பௌத்தசமயத்தின் வேர் ஒன்று சனாதனதர்மாவில் இருந்து இருமதங்களும் வளர்ந்துவந்தது

தமிழர் இந்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்கின்றார்கள் பழங்குடிமக்கள் இன்று அவர்கள் தங்கள் பாரம்பரியத்தை காப்பாற்றி தங்கள் பிரதேசத்தில் தொடர்ந்துவாழ விரும்புகிறார்கள்

ஐக்கிய நாடுகள் சாசனம் வகுக்கப்பட்டது போல் அவர்களுக்கு சுயநிர்ணயம் பற்றி தீர்மானிக்க உரிமையுண்டு.

### நல்லெண்ணம் வேண்டும்

இவைகளுக்கிடையிலும் நல்லெண்ணம் உருவாக வேண்டும். அரசியல் சாசனத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் இடம்பெற வேண்டும் என கருதுகிறோம்.

பிரதேசசுயாட்சி வழங்கப்படவேண்டும்

2 சிங்களமொழியும் தமிழ்மொழியும் தேசிய மொழியாக்கப்படவேண்டும்.

3 நாட்டில் எங்குவாழ்ந்தாலும் தமிழர் ஒருவர் அரசுடன் தமிழ்மொழியில் தொடர்பு கொள்ள உரிமை வழங்க வேண்டும்.

4. தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் தமிழ் நிர்வாக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் இருக்க வேண்டும்.

5. அடிப்படை மனித உரிமைகள் அவசியம் ஏற்படின் நீதிமன்றம்மூலம் அமுல்செய்ய உரிமை இருக்க வேண்டும்.

6 மத்தியஅரசு, உள்ளூராட்சி கூட்டுஸ்தாபனங்களுக்கு ஆட்களை வேலைக்குத் திரட்டும் போதும் பாடசாலைகளிலும் உயர்கல்வி நிலையங்களிலும் மாணவர்களைச் சேர்க்கும் போதும் இனமொழி, மத, சாதி, பால் இப்படியான எவ்வித பாகுபாடும் காட்டப்படாது.

பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் அரசின் உதவியுடன் தமிழரல்லாதவர்கள் குடியேற்றப்படக்கூடாது.

மீண்டும் இப்படியான கலவரங்கள் ஏற்படாதபடி தடுக்க சில யோசனைகள் வழிவகைகளை தங்கள்முன் சமர்ப்பித்துள்ளோம். எங்கள் பிரதிநிதித்துவம் உண்மையான சமாதான நிலையை உருவாக்குவதற்கும் சகோதரத்துவத்தை நிலைநாட்டுவதற்கும் அடிக்கல்லாக அமையும் என நம்புகின்றோம்.


வெளிவந்துவிட்டது

**G.C.E. A|L 1978 AP. பரீட்சைக்குரிய**

**வினா - விடை**

பொருளாதாரம் T. லோகநாதன் B. A.

இந்து நாகரிகம் N. S. ஐயர் M. A.

(A/L, G. A. Q. வகுப்புகளுக்குரியது)

கிடைக்குமிடங்கள் :

| | |
|---|---|
| லோகநாதன் இன்ஸ்ரிரியூட், | 166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| கல்வி போதனுநிலையம், | 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| சிறிலங்கா புத்தகசாலை | 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | 4, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். |



**யாழ். றோட்டறிக் கழகம் நடாத்தும்**

**புதுவருடப் பரிசுப் போட்டி**

யாழ். பஸ் டிப்போவைச் சேர்ந்த பஸ் நடத்துநர்களில் (கொண்டக்ரர்) சிறந்தவராகத் தெரிவு செய்யப்பட்டவருக்கு தங்கப்பதக்கம் அளிக்க யாழ் றோட்டரிக் கழகம் முன்வந்துள்ளது: பஸ் பிரயாணிகள் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி 4-4-78க்கு முன்னர் அனுப்பி சிறந்த நடத்துநரைத் தெரிவு செய்ய உதவுவீர்கள் எனத் தயவாகக் கேட்கப்படுகிறார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
டாக்டர் பா. சோ. பாரதி,
24, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

கூப்பன்:

நடத்துநரின் பெயர்..............................

பதிவு இலக்கம்..............................

அனுப்புபவரின் பெயர்..............................

அனுப்புநரின் விலாசம்..............................

திகதி.................. ..................
ஒப்பம்

பரிசுகள்:- முதற் பரிசு — தங்கப்பதக்கம்
இரண்டாம் பரிசு — வெள்ளிக்கிண்ணம்
மேலும் பரிசுகள் உண்டு 8688


## "பழையமார்க்கட்டுக்குத்தீ!:

# அந்தப் பொலிஸ்காரரின் 'திருவிளையாடல்' எனநினைத்தேன்"

### கான்ஸ்டபிள் ஜெயராசா சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"நான் நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் ஆகஸ்ட் மாதம் கடமையாற்றினேன். யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு ஆகஸ்ட் 15ம் திகதி வழக்கு விசாரணை ஒன்றுக்கு வந்து திரும்ப முடியாமல் போய்விட்டது பொலிஸ்விடுதியில் இரவு தங்கினேன். அன்று 2ம் காட்சிபடம் பார்த்துவிட்டுவந்தபோது சில பொலிசார் வித்தியாசமாக உடை அணிந்திருந்தார்கள், தலையில் துவாய் கட்டியிருந்தார்கள்.

நான் படுத்துவிட்டேன். சிலர் வந்து "பண்ட பண்ட" என எழுப்பினார்கள். பின்பு போய்விட்டனர்.

அருகில் உள்ளவரிடம் எங்கே போகிறார்கள் என்று கேட்டேன். என்னை வெளியிலிருந்து வந்தவர் என அறிந்துகொண்ட அவர், அங்... மச்சாங் புதியாண்ட" என்றார்' படுத்துவிட்டேன்.

மறுநாள் நெடுந்தீவு செல்ல பஸ் நிலையம் வந்தபோதுமுதல் நாள் இரவு 2 மணிக்குப் பொலிசார் பழைய மார்க்கட்டிற்குத் தீவைத்ததாக அறிந்தேன். அவர்களின் திருவிளையாடலாகத்தான் இருக்கும் என எண்ணிக் கொண்டேன்

சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளித்த ஊருகாவற்றுறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் செபஸ்தியான் ஜெயராசா (25 வயது) மேற்கண்டவாறு கூறினார்.

கான்ஸ்டபிள் ஜெயராசா மேலும் கூறியதாவது:

### ஆச்சரியமளித்த சம்பவம்

'நான் முதலில் யாழ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். பின்பு நெடுந்தீவுக்குச் சென்றேன்.

ஆகஸ்ட் 15ம் திகதி வழக்கொன்றிற்காக யாழ்ப்பாணம் வந்தேன். வழக்கு 2-30 மணிக்கு முடிந்தது. அதன்பின் நெடுந்தீவு செல்ல வசதியில்லை. அதனால் பொலிஸ் விடுதியில் தங்கினேன். இரவு 9 மணிக்கு படத்திற்குச் சென்றேன் நள்ளிரவு ஒரு மணிக்குத் திரும்பிவந்தேன். சந்தோரில் 'லைட்' எரிந்து கொண்டிருந்தது. பொலிசார் சாரம், சேட், கால்சட்டை அணிந்து எங்கோ போகப் புறப்பட்டனர். தலையில் துவாய் கட்டியிருந்தனர். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் என் அறைக்குள் சென்று படுத்துவிட்டேன்.

இரவில் ஒருவர் வந்து என்னை சிங்களத்தில் கூறி எழுப்பினார் என் முகத்தைப் பார்த்துவிட்டுப் போய்விட்டார் அவர் போனபின்பு அங்குபடுத்திருந்தவரிடம் 'எங்கே போகிறார்கள்?' என்று கேட்டேன் அவர் பேசாமல் படுக்கும்படி கூறினார் நான் படுத்துவிட்டேன்

### பொலிசார் தீவைத்ததாகப் பேசினர்

"காலை 6-30 மணிக்கு நான்

[5-ம் பக்கம் பார்க்க]

# இனக்கலகத்தை தடுப்பதற்கு

அரசியல் வன்செயல்களும் இனக்கலவரங்களும் இந்த நாட்டில் இனியும் நடைபெறுதபடி புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமெனக் கோரும் தனியார் பிரேரணையொன்று தேசியஅரசப்பேரவையில் விவாதத்துக்கு வரவிருக்கிறது.

அரசியல் வன்செயல்களையும், இனக்கலவரத்தையும் தடுப்பதற்கு புதிய விசேஷ சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற பிரேரணையை தம்பனெனியா எம். பி. திரு யு. பி. விஜயக்கூன் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்

தனிப்பட்ட உறுப்பினர் தினமான இம்மாதம் எட்டாம்திகதிய தேசிய அரசப்பேரவை ஒழுங்குப் புத்தகத்தில் இப்பிரேரணை இடம்பெற்றுள்ளது

முன்னைய ஆட்சிக்காலத்தில் போலல்லாது இன்றைய தனியார் தினத்துக்கும் மதிப்புக் கொடுப்பதால் இப்பிரேரணை அன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடுமென்று எதிர்பார்க்கலாம்.

இனக்கலவரம் இலங்கையில் மட்டுமல்ல வேறுபல நாடுகளிலும் வெவ்வேறு உருவங்களில் இடம்பெற்றிருக்கிறது.

ஆனாலும் வெள்ளம் வருவதுபோல் இங்கு இனக்கலவரம் இயற்கை நிகழ்ச்சியாகிவிட்டது

இதற்கு முற்றுப்புள்ளி வைத்தேயாக வேண்டும். மலேஷியாவில் சில வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின் அங்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இனவேறுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமலிருக்கின்றது.

இந்தியாவில் பாகிஸ்தான் பிரிவினையின்போது மட்டுமல்லாமல் பின்னரும் இடையிடையே சில பகுதிகளில் இனக்கலவரம் ஏற்படுவதுண்டு.

ஆனாலும் அரசமட்டத்தில் இனபேதம் காட்டப்படுவதில்லை. இந்தியக் குடியரசின் ஜனாதிபதி, உபஜனாதிபதி, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகிய பதவிகளுக்குச் சிறுபான்மையினரும் தெரிவு செய்யப்படுவார்கள்; நியமிக்கப்படுவார்கள்.

இலங்கை சின்னஞ்சிறிய நாடு. இங்கு பல மொழி பேசும் மக்களும் பல மதத்தினரும் வாழவில்லை.

சிங்களமும் தமிழும் ஆங்கிலமும்தான் இங்குள்ள மக்களின் மொழி பௌத்தம் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களே இங்கு மக்கள் பின்பற்றும் மதங்களாகும்

இங்கு இனக்கலவரத்தையோ, இனபேதத்தையோ தடுப்பது கடினமில்லை.

இனக்கலவரத்தையும் அரசியல் வன்செயல்களையும் தூண்டிவிடுவோருக்கும் இச்செயல்களில் ஈடுபடுவோருக்கும் கடும் தண்டனை விதிப்பதற்கான சட்டவிதிகள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம்தான்.

ஆனாலும் அரசு மட்டத்தில் ஜனாதிபதி மற்றும் உயர் பதவிகளிலும் சிறுபான்மையினரும் தெரிவு செய்யப்படக் கூடியதாகவும், நியமிக்கப்படக்கூடியதாகவும் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வருவது இனபேதத்தை நீக்கி இனஐக்கியத்தை உருவாக்கப் பெரிதும் உதவும்.

சட்டத்தினால் மட்டும் ஐக்கியத்தை ஏற்படுத்தி விட முடியாது. சமய சமூக நிறுவனங்களுக்கும் இந்த நாட்டுப் பத்திரிகைகளுக்குக்கூட இதில் பெரும் பங்கு உண்டென்பதையும் நினைவில் கொண்டிருப்பது அவசியமாகும்.

"பொலிஸாரும் கி. சேவகரும் நிற்கையில்

# கதிர்காம மடத்திற்கு குண்டர்கள் தீவைத்தனர்"

(யாழ்ப்பாணம்)

"ஆகஸ்ட் 22ம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு கதிர்காம மடமும் அதைச் சேர்ந்த கடைகளும் குண்டர்களால் தீவைக்கப்பட்டு முற்றாக எரிந்து சாம்பலாகின. ஆடு ஒன்று அருகில் உயிருடன் எரிந்துவிட்டது. பொருட்கள் எரிந்தும் எடுத்துச் செல்லப்பட்டுமுள்ளன. பொலிசாரும் கிராமசேவகரும் அப்போது அங்கு நின்றனர். இதனை ஒரு பெண் பார்த்திருக்கிறார். பாதுகாப்புக்கருதி அவர் இங்கு சாட்சியமளிக்க வரவில்லை. தெய்வாதீனமாக நான் அச்சமயம் வேறு இடத்தில் இருந்தேன்"

மேற்கண்டவாறு கதிர்காமத்தைச் சேர்ந்த பொன்னம்பலசுவாமி ஜயாத்துரைசுவாமி சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பொன்னம்பலசுவாமிஜயாத்துரைசுவாமி மேலும்கூறியதாவது: கதிர்காமம் பழைய கதிரமலை வீதி சந்தியிலுள்ள பொன்னம்பலசுவாமி மடம் எனக்குச் சொந்தமானது

இந்த மடம் என் தகப்பனார் பொன்னம்பலசுவாமியினால் 1922ம் ஆண்டு கட்டப்பட்டது. இம்மடத்தில் யாத்திரிகர்கள் தங்கிச் செல்வார்கள், அவர்களுக்கு உணவும் தங்க இடமும் மற்ற வசதிகளும் அளிக்கப்பட்டு வந்தது. வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் ஆயிரக்கணக்கில் வந்து தங்கிச் செல்வார்கள். இந்த யாத்திரிகர்கள் கதிர்காம முருகனைத் தரிசிக்க வருவார்கள். இது ஒரு சரித்திர முக்கியத்துவம்பெற்ற கோவிலாகும். துட்டகைமுனு கூட இந்தக் கோவிலுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வந்ததுண்டு.

ஜூலை வருடாந்த உற்சவத்தின்போது கோவிலுக்கு வரும் சுமார் 50,000 யாத்திரிகர்களுக்கு இம்மடத்தில் உணவு வழங்கப்பட்டு வந்தது. உற்சவகாலத்தில் அவர்கள் தங்கியிருக்கவும் ஏற்பாடுசெய்யப்படுவதுண்டு. சகல மக்களும் மத வேறுபாடின்றி இக்கோவிலுக்கு வந்து மடத்தில் தங்கிச் செல்வார்கள்.

## ஆயிரக்கணக்கான வெளிநாட்டு யாத்திரிகர்

ஆயிரக்கணக்கான ஐரோப்பியர், அமெரிக்கர்கள் மற்றும் வெளிநாட்டு யாத்திரிகர்களாக இக்கோவிலுக்கு வந்து மடத்தில் தங்கிச் செல்வார்கள். இந்த மடத்தின் சேவையைப் பாராட்டிச் சென்றுள்ளனர். இதுபற்றி பல குறிப்புகள் மடத்திலுள்ள பதிவுப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

இம்மடத்திற்கு வந்த முக்கிய யாத்திரிகர்களில் லோட் சோல்பரியின் மகனும் முன்னாள் பிபிலை எம். பி. திரு எஸ். பசநாயக்கா நிலமையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மாணிக்ககங்கையின் தென் பகுதியில் இம்மடம் ஆரம்பத்தில் இருந்து வந்தது.

கதிர்காமம் புனிதநகராகப் பிரகடனம் செய்யப்பட்டபின்னர் அரசு மாணிக்ககங்கைக்கு வடக்கிலுள்ள எல்லா மடங்களையும் அகற்ற முடிவு செய்தது. கோவிலைச் சுற்றியுள்ள சகல மடங்களும் அரசினால் சுவீகரிக்கப்பட்டன.

## அமைச்சர் உத்தரவை மீறினர்

இந்த மடம் மாணிக்ககங்கையின் தென்பகுதியில் அமைந்திருந்ததால் அரசின் முடிவுக்கு இம்மடம் இலக்காகவில்லை. அரசின் முடிவுக்கு மாறாக இந்த மடத்தில் கைவைக்க வேண்டாம் என்ற முன்னாள் காணி அமைச்சர் திரு. கொப்பேகடுவாவின் உத்தரவுக்கு மாறாக பிஸ்கால், பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் 1974ம் ஆண்டு இம்மடத்தை அகற்றினார்கள்.

இதுதொடர்பாக நான் ஏற்கனவே சட்டநடவடிக்கை எடுத்துள்ளேன். இது சுப்ரீம் கோட் விசாரணையில் இருக்கிறது.

இவ்விஷயம் இப்படியிருக்கதான் வேறு ஒருபகுதியில் புதிதாக மடத்தைக் கட்ட மாதிரிப்படம் வரைந்து அங்கீகாரம் பெற்றுப் புதிய மடம் தற்காலிகமாகக் கட்டப்பட்டது. இப்புதிய மடத்தில் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு சேவையாற்றிவந்தேன். அரசிடமிருந்து பெற்ற நிலத்தில் இம்மடத்திற்குச் சொந்தமான கடைகளும் கட்டப்பட்டன. இதில் 3 கடைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. தற்காலிக மடம் 8000 ரூபா செலவில் கட்டப்பட்டது. சுமார் 25,000 ரூபாவிற்கு மடத்திற்கு வேண்டிய அலுமினியப் பித்தளைச் சாமான்கள் வாங்கப்பட்டன.

உதாரணமாக ஒரு அண்டாவில் மட்டும் 500 பேருக்கு சோறு சமைக்கலாம்.

## ஆகஸ்ட் 22ல்

கடந்த ஆகஸ்ட் 22ம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு (21ம் திகதி நள்ளிரவு) குண்டர்களால் இம்மடமும் கடைகளும் தீயிடப்பட்டன. அதனை ஒரு பெண் கண்ணால் கண்டிருக்கிறார். பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கிராமசேவகரும் இச்சம்பவம் நடந்தபோது அங்கு நின்றனர். பாதுகாப்பு நோக்கமாக அப்பெண் இங்குவந்து சாட்சியம் சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்

மடமும் கடைகளும் எரிந்து முற்றாகச் சாம்பலாகிவிட்டன. சுமார் 16,000 ரூபா பெறுமதியான பொருட்களில் சில எடுத்துச் செல்லப்பட்டன. மற்றவைகள் எரிந்துவிட்டன. ஆடு ஒன்று உயிருடன் எரிந்துவிட்டது மடம் தொடர்பாக சகல தஸ்தாவேஜுகளும் வெளிநாட்டவர்கள் மடத்தைப் பற்றிப் பாராட்டி எழுதியகுறிப்புகளும் மதநூல்களும் பெறுமதியான புத்தகங்களும் தீக்கிரையாகின. அதிர்ஷ்டவசமாக நான் வவனியா மாவட்டத்திலுள்ள மடத்திற்குச் சொந்தமானதோட்டத்தில் அச்சமயம் தங்கியிருந்தேன்.

மடம் முற்றாக எரிந்ததனால் 8000 ரூபா நஷ்டமும் பொருளுக்கு 15,000 நஷ்டமும் கடைகளுக்கு 3,000 நஷ்டமும் ஏற்பட்டது.

ஏப்ரல் உற்சவத்திற்கு யாத்திரிகர்களுக்குச் சேவை செய்வ

(4-ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்ட் 16 — 21 வரையான

## 'ஜீப்' நடமாட்ட விபரம்: கமிஷன் கோரியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபரின் 'ஜீப்' நடமாட்டம் பற்றி ஆகஸ்ட் 15-ந் திகதி முதல் 21 ந் திகதி வரையிலான பதிவைச் சமர்ப்பிக்குமாறு சன்சோனிக் கமிஷன் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

அரசாங்க அதிபரின் 'ஜீப்' நடமாட்டத்தின் விபரங்களைக் கொண்ட பதிவுப் புத்தகங்களை கச்சேரி உத்தியோகத்தர் நேற்று கமிஷனிடம் சமர்ப்பித்தார்.

இப்புத்தகங்களைச் சமர்ப்பிக்குமாறு கமிஷன் மூலம் சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகம் கேட்டிருந்தார். நேற்று சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்களில் ஆகஸ்ட் 15 முதல் 21-ந் திகதி வரையிலான 'ஜீப்' நடமாட்ட விபரம் இருக்கவில்லை.

இந்த 'ஜீப்' ஆகஸ்ட் 15-ந் திகதி முதல் 22-ந் திகதி வரை அரசாங்க அதிபர் விஜயபாலாவின் பொறுப்பில் இருந்ததாக கச்சேரி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சட்: அண்டலூட்: ஆகஸ்ட் 16 முதல் 21-ந் திகதி விபரம் தேவை.

இதைத் தொடர்ந்து கமிஷன் அவ்விபரங்களை கேட்டுள்ளது.

# "சிங்களப்பகுதி தமிழர்கள் விபரம் சேகரிப்பு பற்றி தெரியாது என்றனர் பொலிசார்"

## கிராமசேவகர் சிவபாதசுந்தரம் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

தேர்தலுக்குப் பின் கலவரம் ஏற்படும் என்பதற்காக எனது பகுதியில் உள்ள சிங்களவர்களின் பெயர், விலாச விபரத்தைத் தருமாறு பொலிசார் என்னிடம் கேட்டபோது "சிங்களப் பகுதியில் வசிக்கும் தமிழ்மக்களின விபரங்களும் சேகரிக்கப்படுகிறதா? என்று அவர்களிடம் கேட்டேன். அதைப் பற்றித் தங்களுக்குத் தெரியாது என்று பொலிசார் கூறினர்.

இவ்வாறு யாழ் நகர கிராம சேவகர் தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தேர்தலுக்கு முன் பொலிசார் என்னிடம் வந்து எனது பகுதியிலுள்ள சிங்களவர்களின் பெயர் விலாசத்தைத் தருமாறு கேட்டனர். மூன்று பொலிசார் வந்தனர். அவர்களில் ஒருவர் முஸ்லிம். இருவர் சிங்களவர்.

தாமதமாகும் என்று சொன்னேன். பிறகு வந்தால் எடுக்கலாமென்றேன்.

தங்களுக்கு அவசரம் தேவை என்றனர் அப்படியென்றால் எழுத்து மூலம் விண்ணப்பியுங்கள் என்றேன்

இந்த விபரங்கள் ஏன் என்று கேட்டேன்.

தேர்தலுக்குப் பின் கலவரம் ஏற்படுமென்பதால் சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்குத் தேவை என்றனர்

நான் அதிர்ச்சியடைந்துவிட்டேன்

அப்படியானால் சிங்களப் பகுதியில் உள்ள தமிழர்கள் பற்றிய விபரமும் சேகரிக்கப்படுகிறதா? என்று கேட்டேன்

அதைப்பற்றித் தங்களுக்குத் தெரியாது என்றனர்



அவர்கள் மீண்டும் வரவில்லை வேறு கிராமசேவகர்களிடமும் கேட்டேன் தங்களையும் பொலிசார் வந்து விபரம் கேட்டதாகச் சொன்னார்கள்

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன் சுக்கானில்லாத கப்பலுக்கு நிகராவான்.

- காந்திமகான்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
துணிவே துணை

பூலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
நெஞ்சிருக்கும்வரை

## கடலில் விமானம் 47 பேர் பலி!

வெனிசூலா, மார்ச் 5

வெனிசூலாவில விமானம் ஒன்று கடலுக்குள் வீழ்ந்ததை அடுத்து அதில் பயணம் செய்த 47 பேரும் பலியாகி யுள்ளனர் என அறிவிக்கப் பட்டது.

கடந்த முன்தினம் இரவு கரக்காஸிலிருந்துபுறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விமானம் வீழ்ந்ததாம். (இ)

Rio Daily 4 shows
Jaffna (Phone: 7607)
SAMURAI PIRATES

நெருக்கடிகால அத்துமீறல்:

# தனிநபர் விசாரணைக்கமிஷன் நியமித்துள்ளது தமிழக அரசு

சென்னை, மார்ச் 5

1972-ம் ஆண்டிற்கும் 1975-ம் ஆண்டுக்கும் இடையே நெருக்கடி கால வேளையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல் சம்பவங்கள் பற்றி விசாரணை செய்வதற்குத் தமிழ்நாடு அரசு தனிநபர் கமிஷன ஒன்றை நியமித்துள்ளது.

இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில் இக் கமிஷன் விசாரணை நடைபெறும்.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரும் கூட அத்து மீறல்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுள்ளதாகவும் இவை பற்றி எல்லாம் விசாரணை நடத்த கமிஷன் நியமிக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சட்டசபையில் ஏற்கனவே உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கமிஷன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆறு மாத கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. [உ]

## எம். ஜி. ஆரின் நிதி 5 கோடியைத் தாண்டியது

சென்னை, மார்ச் 5

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் வெள்ள நிவாரண நிதி 5 கோடி ரூபாவைத் தாண்டி விட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை இந்நிதிக்கு 5 கோடி 87 லட்சம் ரூபா வரை கிடைத்துள்ளது.

இதுதவிர 1550 அமெரிக்க டாலர்களும் கிடைத்துள்ளன. [உ]

## மீண்டும் பிரதமர்

பீக்கிங், மார்ச் 5

சீனவின் 25-வது பாராளுமன்றம் கூடி திரு. பெங்கை மீண்டும் பிரதம மந்திரியாக தேர்ந்தெடுத்துள்ளது.

கட்சியின் தலைவராகவும் அவரே மீண்டும் தேர்தெடுக்கப்பட்டுள்ளார். [உ]

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா
நடித்த
சித்தி

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

## விஸ்வமடு அகதிகளுக்கு 2500 இரு. கோவா அன்பளிப்பு

[விஸ்வமடு]

விஸ்வமடு திருவள்ளுவர் புரத்திலுள்ள 200 அகதிகள் குடும்பங்களுக்கு 2500 இருத்தலுக்குக் கூடுதலான முட்டைக் கோவாவை சந்திரன் என அழைக்கப்படும் இராசமூர்த்தி என்னும் விவசாயி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

திரு. இராசமூர்த்தியின் அந்த அன்பளிப்புக்கு விஸ்வமடு திருவள்ளுவர்புர திருவள்ளுவர் முன்னேற்றக்கழகப் பொருளாளர் திரு. எஸ். கதிரவேல் குருசாமி சாஸ்திரிகள் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார். [உ]

Regal JaffnaDaily 4-45. 7-00 & 9-30 p.m. only
Mark Forrest
in
"MACISTE IN THE VALLEY OF THE KINGS"
(Scope-Color-action)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கமல்....ஸ்ரீவித்யா....மேஜர்.... ரஜனிகாந்த்.... நகேஷ்
அபூர்வ டைரக்டர் கே. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்
(புதிய பிரதி)

## கல்வி அமைச்சு அனுமதி

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் 6-ம்வகுப்பு ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தூதுக்கோஷ்டி ஒன்று கல்வி அமைச்சரைப்பேட்டி கண்டு இக்கோரிக்கையை வலியுறுத்தியதனையடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## காங்கிரஸ் தற்காலிக தலைவர் சுவரண்சிங்

புதுடில்லி, மார்ச் 5

உத்தியோக காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு பிரமானந்தரெட்டியின் ராஜினாமாவைக் கட்சியின் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டுள்ளது.

காங்கிரஸின் தற்காலிகத் தலைவராக முன்னாள் வெளிநாட்டமைச்சர் திரு. சுவரண்சிங் நேற்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அண்மையில் பிரிந்து கொண்ட உத்தியோகபூர்வக் காங்கிரஸ் கட்சியும் தமது கட்சியும் இணையவேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் தலைவர் திருமதி இந்திரா காந்தி ஆலோசனை தெரிவித்த பின்னரே திரு. சுவரண்சிங் தற்காலிகத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### மனம் தளரக்கூடாது

நடந்து முடிந்த தேர்தலில் உத்தியோகபூர்வக் காங்கிரஸ் தோல்வி அடைந்தபோதிலும் கட்சி உறுப்பினர்கள் மனம் தளராது தமது பணியைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (இ)

கம்போடிய-வியட்னமிய

## பிணக்கு: பாரதம் ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 5

கம்போடியாவுக்கும், வியட்நாமுக்கும் இடையிலான பிணக்கைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு பாரதம் ஆதரவு தெரிவித்துள்ளது.

வியட்நாமியப் பிரதமர் பாரதத்திற்கு மேற்கொண்ட ஒருவாரகால விஜயத்தின்பின் இரு நாட்டுத் தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. [உ]

## கூட்டணிக் கிளை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் நயினாதீவு வடக்குக்கிளை நிறுவப்பட்டது. கிளைக்கு பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வை. கணபதிப்பிள்ளை, உபதலைவர் திரு. செ. ந. துரைராசசிங்கம், செயலாளர் திரு. சி. சிவானந்தர், உபசெயலாளர் திரு. மு. ச. திருநாவுக்கரசு பொருளாளர் திரு. சு. பாராஜசேகரம், நிர்வாக உறுப்பினர்கள் அ. மாசிலாமணி சி சிறிநிவாசமூர்த்தி, நா. சிவராஜசிங்கம் சோ. சின்னத்துரை, ச. ஜெகதீஸ்வரன் ந. தவநாயகபதி. (இ)



## கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவிலில் நாளை இரவு ஞானபண்டித சைவருத்திச்சங்க சார்பில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை முத்தமிழ்ச் செல்வி ராதா சோமசுந்தரம் "சிவராத்திரி மகிமை" என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாகாலட்சேபம் நிகழ்த்துவார்

மற்றும் வில்லுப்பாட்டு, பக்திப்பாடல்கள், இன்னிசை விருந்து, பண்ணிசை விருந்து இடம்பெறும் (க)

## கதிர்காமம்—

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தற்காக ஒழுங்கு செய்யவேண்டும். அதற்கு 26,000 ரூபா நஷ்டஈடு வழங்க சிபாரிசு செய்யுமாறு கமிஷனர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்." [அ]

ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
[யாழ். நகர்]
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - பத்மினி
காட்டு ரோஜா

லிடோ போன் 7693
(யாழ். நகர்)
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

கடைசி வாரம்
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன் [illegible]

### "ராணிதியேட்டர் முன்னுல்

# பொலிசார் இளைஞர்களை நிர்வாணமாகஓடச்செய்தனர்

## சிறுவனை அடித்து உதைத்து றைபிளால் தாக்கினுர்கள்"

(யாழ்ப்பாணம்)

யாழ். பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த குமாரசாமி நித்தியானந்தன் சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:

"நான் யாழ் மின்சார நிலையத்தில் கடமையாற்றுகிறேன் ஆகஸ்ட் 17 ம் திகதி கடமையாற்றினேன். பூபாலசிங்கம் புத்தகசாலை, ஹட்டன் நாஷனல் வங்கி, பஸ் நிலையம் ஆகிய இடங்களில் மக்கள் திரண்டு நின்றனர்.

முதல் இரவு அசம்பாவிதம் நடந்ததாகக் கதைத்துக் கொண்டு நின்றனர்.

சோமசுந்தரப் புலவர் சிலை உடைந்திருந்தது. சுபாஸ்கபே பெயர் பலகை உடைக்கப்பட்டிருந்தது ஹட்டன் நாஷனல் வங்கிப் பெயர் பலகையும் உடைக்கப் பட்டிருந்தது.

பழைய மார்க்கட்டில் பாய்க் கடை எரிந்து கிடந்தது. நான் போய் எல்லாவற்றையும் பார்த்தேன்.

**எம். பியிடம் புகார்**

யாழ். எம். பீ. திரு வெ. யோகேஸ்வரனிடம் மக்கள் புகார் செய்து கொண்டிருந்தார்கள். அவர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் மாநகர சபை ஆணையாளர் அப்போது வந்து எங்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் பஸ் நிலையப் பக்கத்திலிருந்து வெடிச் சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்த்தேன், மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஜீப் ஒன்று வந்து நின்றது. பொலிசார் இறங்கினுர்கள்.

**சிறுவனை உதைத்தனர்**

இருபையனைக் காலால் அடித்து உதைத்தனர் பொலிஸார். பக்கத்தில் நின்ற மற்றப் பொலிஸுக்கு என்னவோ சொன்னுர்கள். அவர் றைபிளால் அப்பையனை அடித்தார்" அவன் விழுந்து விட்டான். அப்பையனை பொலிஸார் தூக்கிப் போய் ஒரு கடையில் வளர்த்தினுர்கள்.

பொலிஸார் பின்னர் ஆஸ்பத்திரி விதிக்கு வந்தனர். வழியில் மின்சார நிலையத்தைக் கடந்து சென்றபோது ஒரு பொலிஸ்காரர் வந்து மின்சார நிலையக் கதவை உதைத்துவிட்டுப் போனுர். அதனை நான் பூபாலசிங்கம் புத்தகசாலையில் நின்று பார்த்தேன். சார்ஜண்ட். சம்சுதினும் 4 பொலிஸாரும் வந்தனர். "உள்ளுக்குப் போங்கடா" என்று கூறிவிட்டு சென்றனர். அதன்பின் ஒருமணி நேரத்தின்பின் கஸ்தூரியார் வீதிப்பக்கம் ஒரு வெடிச்சத்தம் கேட்டது அதனைத் தொடர்ந்து பல வெடிச்சத்தங்கள் கேட்டன. பின் வெலிங்டன் தியேட்டர் பக்கமும் வெடிச் சத்தம் கேட்டது.

**எரிபொருளுடன் பொலிஸார்**

'மின்சார நிலையத்திற்குள் இருந்த ஒரு மேடையில் ஏறி நின்று பார்த்தேன், பொலிஸார் எரிகின்ற பொருள் ஒன்றைக் கொண்டுவந்து கடைக்களுக்கு எறிந்தார்கள்.

'பழைய மார்க்கட் எரிந்து கொண்டிருந்தது, புகைமண்டலம் வானத்தில் கிளம்பியது. தீயைச்சிலர் அணைக்கப் பார்த்தார்கள், பொலிஸார் அதற்குத் தடையாக நின்றுர்கள். 3 மணிக்கு ஆணையாளர் பழைய மார்க்கட் மின்சாரத் தொடர்பை துண்டிக்க சொல்லி வாகனம் அனுப்பினுர். நாங்கள் போய் துண்டித்துவிட்டு வந்தோம்.

**இளைஞர்களை நிர்வாணமாக ஓடச்செய்தனர்**

'ராணி தியேட்டருக்கு எதிரில் வந்த இளைஞர்களைப் பொலிஸார் மறித்து அவர்கள் பக்கட்டுகளிலிருந்தவற்றை எடுத்தபின், அவர்களின் உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி ஓடச் சொன்னுர்கள்.

முதல்நாள் இரவு கராச்சில் உள்ள கார் கண்ணுடிகள் உடைக்கப்பட்டிருந்தன நான் போய் பார்த்தேன். மத்தியானம் சாப்பாட்டுக்குப் போகவில்லை. வீட்டிற்குப் போக வசதியில்லை, மற்றவர்களும் போகவில்லை'. (அ)

---

## 'கார்ட் என்று நான் கூறியதும் அடித்தார்கள்'

(யாழ்ப்பாணம்)

ரயில்வே கார்ட் ஆழ்வாப்பிள்ளை மாணிக்கம் சன்சோனி கமிஷன்முன் கூறியதாவது:

"ஆகஸ்ட் 16ம் தேதி என் தாயாரும் மனைவியும் கொழும்புத்துறை செல்வதற்காக பஸ் நிலையம்வந்தார்கள் அப்போது காலை 8-30 மணியிருக்கும்பஸ் நிலையத்தில் பொலிசார் மக்களைத் தாக்குவதாக அறிந்தேன். நான் அவர்களைப் பாதுகாக்கச் சென்றேன்

வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு வந்ததும், பொலிசார் றைபிளுடன் அணிவகுத்து நின்றனர் ஜீப்பில்வந்தபொலிசார் 4 பக்கமும் சுட்டனர். நான் போய்விட்டேன்.

அன்று அகதிகள் யாழ்ப்பாணம் வரஇருந்ததால் கடமைக்குச்சென்றேன. 10-30மணிக்கு ரயில் ஒன்று வந்தது அதில் 2 பொலிசரும், ஒரு சிறைச்சாலைப் பாதுகாவலரும் வந்தனர். ரயில் நிலையத்தில் பரபரப்புஏற்பட்டது. யாழ்.எம். பீ திரு. யோகேஸ்வரன் அவர்களை ரயில்நிலைய அதிபர்அறைக்குக் கூட்டிச் சென்றுவிட்டார்.

அதன்பின் 11 30 மணிக்கு வீட்டிற்குப்போகப் புறப்பட்டேன். நாகவிகாரையின் பொலிசார் றைபிளுடன் நின்றனர்.

மின்சாரபொறியியலாளரை அவர்கள் தாக்கி வதைத்துக் கொண்டிருந்தலர். என்னைக் கண்டதும் 4 பேர் என்னிடம் ஓடிவந்தனர் நான் கார்ட் என்று அவர்களிடம் சொன்னேன். எனக்கு அடித்தார்கள், நான் ஓடினேன். மீண்டும் அடித்தார்கள். கையில்பலமாக அடிபட்டது அவர்கள் பூனிபோம் அணிந்திருந்தனர். நம்பர் இல்லை." (அ)

---

## தமிழர்கள் உயர்பதவி—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நோட்டீசை நவம்பர் 24-ம் திகதி அனுப்பிவைத்தனர். நான் இன்று வேலையற்றிருக்கின்றேன். நாங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுவிட்டோம். ஆதலால் முழுநஷ்ட ஈடும் தர சிபார்சு செய்யுமாறுகோருகின்றேன்.

என்னை யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்வதுடன் நான் வேலைக்குச் செல்லாத நாட்களுக்கு விசேட சம்பள லீவு வழங்க சிபார்சு செய்யுங்கள்.

இடமாற்றம் வழங்காதபட்சத்தில் கலவரம் காரணமாக வேலை இழந்ததற்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். பத்தவருட சம்பளம் சேர்த்து 60,000 ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும்

யாழ். சமுகசேவை இலாகா என் விண்ணப்பத்திற்கு செவிசாய்க்கவில்லை. பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்டது போல், எனக்கும் நிவாரணம் வழங்கவேண்டும்.

19-ம் தேதி நான் கந்தோருக்கு வேலைக்குப்போனதும், வானெலியில் நடப்பதை அறிந்தருப்பீர் என்று சக ஊழியர்என்னிடம் கூறி யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவிடுங்கள் எனக்கூறினுர்கள். நான் 17 வருடங்கள் கடமையாற்றினேன். என் உடமைகள் எல்லாம் போய்விட்டன.

கமிஷனர்: கொள்ளையடித்தார்களா, எரித்துவிட்டார்களா?- கொள்ளையடித்து பொருட்களைக்கொண்டுசென்றுவிட்டனர். அயல் சிங்களவர் அங்கு குடிபுகுந்துவிட்டார். அதனுல் மற்றச் சாமான்களைக்கூண்டர்கள் எடுக்கமாட்டார்கள் என்று சொன்னுர்கள்.

**ஒழித்துக்கட்ட விரும்பினுர்கள்**

எனது கந்தோரில் 52 சிங்கள ஊழியரும் 4 தமிழ் ஊழியரும் இருக்கின்றுர்கள். தமிழர் ஒருவர் பொறுப்பாக, நான் பிரதம லிகிதராக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. என்னை ஒழித்துக்கட்ட விரும்பினுர்கள் என அறிந்தேன். நல்ல காலமாக ஆகஸ்ட் 22ம் திகதிக்குப்பின் நான் வேலைக்குச்செல்லவில்லை நான் போயிருந்தால் என்னைத்தீர்த்துக் கட்டியிருப்பார்கள்.

---

### "கவசமோட்டாரில் வந்த

# இராணுவத்தினர் கடைகளை

## உடைத்துக்கொள்ளையடித்தனர்"

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு உத்தியோகத்தரான திரு. கனகரத்தினம் நாகராசா சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

பஸ் நிலையத்தைப் பாதுகாக்க நான் நியமிக்கப்பட்டிருந்தேன் அன்று குணரத்தினம் அரசரத்தினம், நடராசா ஆகியோரும் கடமையாற்றினுர்கள். யாழ்ப்பாணத்தில் குழப்பம் இருந்ததால் அன்று 2 பேர் மேலதிகமாகக் கடமை புரிந்தனர்.

"19-ம் தேதி இரவு றியோ கூல்பாருக்கு அருகில், இராணுவ கவசவாகனம் வந்துநின்றது. அருகில் உள்ள கடையை உடைத்துப் பொருட்களைக் கொள்ளையடித்து வாகனங்களில் ஏற்றினுர்கள்.

"2ம்முறை வந்து மிச்ச சொச்சசாமான்களையும் எடுத்தனர். பின் அம்பாள் கபேக்கு வந்து ஆட்களைக்கூப்பிட்டனர். ஒருவரும் வரவில்லை இ. போ. ச. கந்தோரிலிருந்து இவற்றைக் கவனித்தோம்.

"3-ம் முறை அம்பாள் கபேக்குவந்து ஆயுதத்தினுல் உடைத்து கடையைத் திறந்தனர்.

**கூல் றிங் குடித்தனர்**

றேடியோவை எடுத்துகீழே போட்டு உடைத்தனர். ஒலிபெருக்கியை எடுத்துவந்து தமது வாகனத்தில் வைத்தனர். உள்ளேயிருந்து கூல்றிங் குடித்தார்கள். சோடா போத்தல்களையும் கொள்ளையடித்தனர்.

20-ம் தேதி இரவும் நான் கடமையாற்றினேன். அன்று சோமசுந்தரப்புலவரின் சிலைக்கு அருகில் கவசமோட்டார்வந்து நின்றது. இராணுவத்தினர் இறங்கிவந்தனர். இ. போ. ச. கந்தோரிலிருந்து டெலிபோன் வந்தது. கிரிங்... கிரிங் என மணி அடித்தது. உடனே அவர்கள் றைபிளுடன் ஓடிவந்தனர்.

பி குணரத்தினம் டெலிபோனுக்குப் பதிலளித்தார். எங்கே பேசுகிறீர்கள் என்று இராணுவத்தினர் கேட்டனர்.

கோண்டாவில் டிப்போவுடன் பேசுகிறோம். நாளை முழுநாள் ஊரடங்குச் சட்டம் அதனுல் சாப்பாட்டு ஒழுங்கு பற்றிப் பேசுவதாகக் கூறினேம். பின்பு சென்றுவிட்டனர். ஒருவர் பின்பக்கத்தால் வந்து கந்தோருக்கு அருகில் நின்றுர்.

சுபாஸ் கடைப் பக்கம் சத்தம் கேட்டது. கோப்பிபார், மணிக்கூட்டுக்கடை, புத்தக் கடைகளில் சத்தம் கேட்டது. கடைகளை அடித்து உடைத்து பொருட்களைக் கொள்ளையடித்து வாகனங்களில் ஏற்றினுர்கள்."

பொன்னம்பலம் குணரத்தினம் தமதுசாட்சியத்தில் கூறியதாவது:

பொன்னம்பலம் குணரத்தினம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

'நான் இ. போ. ச. கந்தோரில் பாதுகாப்பாளராகக் கடமையாற்றினேன். ஆகஸ்ட் 20 ம் தேதி, 4 இராணுவத்தினர் சிங்களத்தில் பேசினுர்கள். டெலிபோனில் என்ன பேசியதென்று கேட்டனர். சாப்பாட்டு விஷயம்பற்றிக் கதைத்ததாகக்கூறினேன். பின்பு சென்றுவிட்டனர். கடைகளை உடைத்த சத்தம் கேட்டது கைக்கடிகாரங்களைக் கைகளில் அள்ளிக்கொண்டு சென்றனர்.

கமிஷனர்: எத்தனை கைக்கடிகாரங்களை?- காற்சட்டைப் பைகளிலும் நிரப்பிச்சென்றனர்.

நான் அவர்களுக்கு என் உருவம் தெரியாமல் கந்தோரில் 4 மணிவரை முழங்காலில் நின்றேன். (அ)

---

### பழைய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்து நெடுந்தீவுக்குப் புறப்பட்டேன் பஸ் நிலையத்திற்குப் போனேன் சிலர் கூடி நின்று முதல் நாளிரவு நடந்த சம்பவம் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர் ஒருவரைக் கூப்பிட்டு விசாரித்தேன் முதல் நாள் இரவு பொலிசார் வந்து பழைய மார்க்கட்டுக்கு நெருப்பு வைத்து விட்டார்கள் என்று கூறினுர்கள் பொலிசார் என்று எப்படித் தெரியும் என்று கேட்டேன் பொலிஸ் ட்ராக்கில் வந்தார்களென்றும் காற்சட்டை சேட் அணிந்து தலையில் துவாய் கட்டியிருந்தார்கள் என்றும் கூறினர்

எத்தனை மணிக்கு நடந்தது எனக் கேட்டேன் அதிகாலை 2 மணிக்கு என்று சொன்னுர்கள் 'இது அவர்களின் திருவிளையாடல்' என்று நினைத்துக்கொண்டேன் பஸ் வந்ததும் நெடுந்தீவு போய்விட்டேன் பின்னர் 2 நாள் கழித்து இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளைக்கு இச்சம்பவம் பற்றிக் கூறினேன் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளையின் கீழ் நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினேன் 2 நாள் கழித்து விசேஷ டியூட்டிக்காக யாழ்ப்பாணம் வந்தபோது கூறினேன்

சட்டத்தரணி சில்வா: மற்றவர்களுக்கு இதுபற்றிச் சொன்னீரா?- ஆம்

சட்: யாருக்கு? சார்ஜன்ட் நடராசாவுக்கு (அ)

---

## 'சப்பாத்துச் சத்தத்தின் பின் பஸ்நிலையகடைகள் எரிந்தன

### மின்நிலைய ஊழியர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மின் நிலையத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவராமலிங்கம் சன்சோனிக்கமிஷன் முன் அளித்த சாட்சியத்தில் கூறியதாவது:

"ஆகஸ்ட் 26-ம் தேதி நான் கடமைக்குச் சென்றிருந்தேன பஸ் நிலையத்தில் சப்பாத்துச் சத்தம் கேட்டது. அப்போது அதிகாலை 2 00 மணிக்கும் சில நிமிடத்தில் பின் பஸ்நிலைய கடைகள் எரியத் தொடங்கின அங்கு 32 கடைகள் இருந்தன அப்போது ஊரடங்குச்சட்டம் இருந்தது

சாதாரண பொதுமக்கள் அந்நேரம் நடமாட முடியாது பாதுகாப்புப்படையினர் தான் நடமாடமுடியும். இதுபற்றி நான் மின்சாரசுப்பிறிண்டனுக்குத் தெரிவித்தேன். கடைகள் முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டன

"ஏ எஸ். பி மகேஸ்வரன் விசாரணை நடத்தினுர். நான் அவரிடம் சாட்சியமளித்தேன். இணைப்பு அதிகாரி திரு ருத்ரா ராஜசிங்கத்திடம் புகார் செய்தேன.

---

### சினவெடி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒருவர் மக்கள் கடைக்கு குண்டு விசிவிட்டனர் என்று சத் மிட்டார், (சிரிப்பு)

---

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

மறவன்புலோ கிராம அபிவிருத்திச்சங்கத்தின் புனரமைப் கூட்டம் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. யோ. சேவ்சகாயம் தலைமையில் நடைபெற்றபோது நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: வை. பஞ்சலிங்கம், உபதலைவர்கள்: செ திருநாவுக்கரசு. கோ சண்முகம், செயலாளர்: தி மகாலிங்கம், உபகாரியதரிசி: கு சரவணபவன், பொருளாளர்: இ வல்லிபுரம், கணக்காய்வாளர்: இ. சோதிலிங்கம்

செ ஞானப்பிரகாசம், நா. நாகராசா, க சச்சிதானந்தன், க. வைத்திலிங்கம், ந யோகீஸ்வரன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

"பொலிசார் துரத்தியபோது மக்கள்

# யாழ். எம்.பி. வீட்டுக்குள் மதிலால் பாய்ந்தார்கள்"

## யாழ். மத்தியகல்லூரி மாணவன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**"யாழ்-ஆஸ்பத்திரி ஓவசியர் திலகர், பொலிஸ் நிலையம் வந்து தனது றைபிளை பொலிசார் பறித்ததாக புகார்செய்தார். அந்த றைபிள், யாழ் நீதவான் நீதிமன்றவழக்கொன்றில் தடயப் பொருளாக சமர்ப்பிக்கப்பட்டதாக அறிந்தேன்."**

யாழ்.பொலிஸ் நிலையஇன்ஸ்பெக்டர் திரு பொன்னம்பலம் இராமநாதன், நேற்று மூன்றினம் சாட்சிய மளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். திலகர் புகார்செய்ய வந்தபோது ஏ எஸ் பி யோசப்பும் இருந்தார். பொலிஸ் நிலையத்திலிருந்து. அந்த துவக்கு கோட்டுக்கு கொண்டுசெல்லப்பட்டது. திலகர் புகார் செய்தபோது றைபிளுக்கானலைசென்சையும் வழங்கினர்.

### மாணவன் சாட்சியம்

திலகர் ராஜகுமார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் யாழ் மத்திய கல்லூரியில் படிக்கிறேன். என் தந்தை ஆஸ்பத்திரியில் ஓவசியராகக் கடமையாற்றுகிறார். தாயாரும் அங்குதான் கடமையாற்றுகிறார். தகப்பனார் தமிழர். தாயார் சிங்களப்பெண்.

ஆகஸ்ட் 16ம்தேதி நாங்கள் வீட்டிலிருந்தோம். 9-30 மணிக்கு என் தந்தை நகரத்தில் குழப்பம் நடப்பதாகவும், வெளிக்கிட வேண்டாமென்றும் தகவல் அனுப்பினார். பத்திரிகை அனுப்பினார். நாங்கள் படித்துக் கொண்டிருந்தோம்.

### பொலிசார் வந்தனர்

அச்சமயம் பொலிசார் மக்களைத் துரத்திக் கொண்டு வந்தார்கள். மக்கள் எங்கள் வளவிற்குள் வந்து. அருகிலிருந்த யாழ் எம் பி யோகேஸ்வரன் வீட்டுக்கு மதிலினால் பாய்ந்து சென்றனர்.

### வீட்டுக்குள் புகுந்தனர்

துரத்திவந்தபொலிசார் எங்கள் வீட்டுக்குள் புகுந்தனர். நான்தான் முன்னுக்கு இருந்தேன். எனக்கு அடித்தார்கள். முன்பக்கம் ஓடினேன். முன்கதவால் வந்த பொலிசார் அடித்தனர். திரும்பி வீட்டுக்கு ஓடிவர, வாங்கில் தடக்குப்பட்டு விழுந்தேன். என் தந்தையின் றைபிளை எடுத்துக்கொண்டு 2 பொலிசார் போனார்கள். 'அது தகப்பனின் றைபிள், எடுக்கவேண்டாமென' அக்கா கூறினார். பொலிசார் திரும்பி வந்து அடித்தார்கள். தங்கச்சி ஏதோ சொல்லிக் கேட்டது. என்ன சொன்னார் என்றுதெரியாது. நான் அடி தாங்காமல் விழுந்துவிட்டேன். 'தம்பி ஓடிவிடு' என்று அக்கா கூறினார். நான் மதிலால் பாய்ந்தபோய் மரமொன்றுக்கு கீழ் ஒழித்து விட்டேன். நடக்கமுடியாமல் இருந்தது.

சட். சில்வா: குருசாமி வந்ததைக் கண்டீரா?-ஆம்

சட்: றைபிளை எங்கிருந்து எடுத்தார்கள்?- தந்தையின் படுக்கை அறைக்குள்.

### செல்வி வாமி சாட்சியம்

செல்வி வாமி திலகர் (23 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 16ம் தேதி 9-30 மணிக்கு வீட்டிலிருந்தோம். பொலிசார் வந்து சகோதரன் ராஜகுமாரை தாக்கினார்கள். அன்று காலை என் தகப்பனார் கலவரம் நடப்பதாகவும், வெளிக்கிட வேண்டாமென்றும் தகவல் அனுப்பினார். அதனால் வீட்டிலிருந்தோம். பொலிசார் ஆட்களைத் துரத்திவந்தார்கள். ஆட்கள் யாழ். எம். பி வீட்டுக்கு மதிலால் பாய்ந்து சென்றுவிட்டனர்.

### தம்பியைத் தாக்கினார்கள்

பொலிசார் எங்கள் வீட்டுக்கு வந்து தம்பியைத் தாக்கினார்கள். தம்பியின் முழங்கால் சில்லில், றைபிள்பிடியால் அடித்தனர். சில பொலிசார் முன்கதவால் வந்தனர்.

என் தந்தையின் றைபிளை பொலிசார் எடுத்துச்சென்றபோது அது 'தந்தையின் றைபிள் கொண்டுபோகவேண்டாம்' எனக்கூறினேன் வெளியில் நின்று அடிக்கும்படி கூறினார் 2 கான்ஸ்டபிள்வந்து தம்பியை மீண்டும் அடித்தனர். தம்பி ஓடிவிட்டார் பின் மற்ற தம்பிக்கு அடித்தார்கள். குருசாமி வந்துஅடிக்க வேண்டாம் என்றார்."

## கிளிநொச்சி—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் எல்லோரும் கலந்துகொண்டனர். தற்போதைய அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ. ஜோசப் தலைமையில் நடந்த முதலாவது மாவட்ட நிதிஒதுக்கீட்டு வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் பத்து லட்சம் ரூபா வீதம் இக்கூட்டத்தில் நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களதும் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களதும் சிபார்சின்படி ஒவ்வொரு தொகுதிக்குமான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதென்றும்இக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இந்த நிதியை செலவு செய்வதற்கான திட்ட அறிக்கையை அவ்வப்பகுதி பிரிவு உதவிஅரசாங்க அதிபர்களும பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தயாரித்து அரசாங்க அதிபருக்கு விரைவில் அனுப்பிவைக்கவேண்டும்.

### கிளிநொச்சிக்கு

இளைஞர்களின் வேலைவாய்ப்பை முன்னிட்டும், மாவட்ட விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னிட்டும் கிளிநொச்சித் தொகுதிக்கு பேலதிகமாக நிதிஒதுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தும் ஒரு லட்சம் ரூபாவை கிளிநொச்சித் தொகுதிக்கு ஒதுக்குவதென்று முடிவுசெய்யப்பட்டது.

கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட பத்து லட்சம் ரூபாவுடன் ஏனைய பத்துத் தொகுதிகளுக்கு ஒதுக்கும் பணத்தில் பத்து லட்சம் ரூபாவையும் சேர்த்து இருபது லட்சம் ரூபாவை கிளிநொச்சித் தொகுதிக்கு செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதை யாழ். மாவட்ட சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கீகரித்தனர்.

கடந்தஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தியடையாமல் இருக்கும் வேலைகளை இந்த நிதிஒதுக்கீட்டு பணத்திலிருந்து எடுத்து அவ்வேலைகளை பூர்த்தி செய்யலாம் என்றும், கடந்த ஆண்டு திட்டமிடப்பட்டு தொடங்கப்படாமல் இருக்கும் வேலைகளை நீக்கிவிடவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

முளங்காவில் இளைஞர் விவசாயத் திட்டத்தை விரைவில் ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதுசம்பந்தமான அறிக்கைகள் மாவட்டக்காணி உத்தியோகத்தர் திரு. ஞானநாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டன.

மார்ச் மாதம் 18ம் திகதி இக்குழு மீண்டும்கூடி புதிய வேலைத்திட்டங்களை வகுப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இத்திகதிக்கு முன்னர் வேலைத்திட்டம் சம்பந்தமான அறிக்கைகளை உதவி அரசாங்க அதிபர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தயாரிப்பர்.

# தமிழர் உயர்பதவியிலிருப்பது எனது ஊழியர்களுக்கு கசந்தது

## வேலைக்கு மீண்டும் போயிருந்தால் எனது கதை முடிந்திருக்கும்'

### கூ.மொ. வி. ஊழியர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"வானொலியில் நாட்டில் நடந்தவற்றை அறிந்திருப்பீர்கள். ஆதலால் நீங்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று விடுங்கள், என்று நான் காரியாலயத்திற்கு வேலைக்குச் சென்றதும் எனது சக ஊழியர்கள் ஆலோசனை கூறினார்கள்"

'தமிழர் உயர் பதவியில் இருப்பது என் சந்தோஷ ஊழியருக்கு கசந்தது. என்னை தீர்த்துக்கட்ட முயற்சித்தார்கள். நல்ல காலமாக நான் ஆகஸ்ட் 22-ம் திகதிக்குபின் வேலைக்கு போகவில்லை, போயிருந்தால் என் கதையை முடித்திருப்பார்கள்.

'வீடு கொள்ளையடிக்கப்பட்டதும், வீதியிலே குழந்தைகளுடன் இருந்தோம். எங்களுக்கு அன்றிரவு 'சிவராத்திரி'

நான் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்தேன், எனக்கு வேலை நீக்க நோட்டீஸ் கிடைத்தது'

சன்சோனி கமிஷன் முன் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை சேர்ந்த கந்தையா நாகராசா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தையாநாகராசா மேலும் கூறியதாவது: ஆகஸ்ட் கலவரத்தில் நான் பாதிக்கப்பட்டேன், அச்சமயம் கொட்டாஞ்சேனைத் தெருவில் என் குடும்பத்துடன் இருந்தேன், அப்பகுதியில் என்னுடன் 11 தமிழ் குடும்பத்தினர் இருந்தனர்.

### 12 வீடுகள் தாக்கப்பட்டன

ஆகஸ்ட் 22-ம் திகதி மாலை 7 மணிக்கு ஆயுதம் தாங்கிய குண்டர்களால் என் வீடும் மற்ற 11 தமிழர்களின் வீடும் தாக்கி கொள்ளையடிக்கப்பட்டது, இந்த கலவரத்தில் எங்கள் வீட்டுத் தளபாடங்கள் யாவற்றையும் அடித்து நொருக்கினார்கள். நல்ல தளபாடங்களைக் கொண்டு சென்றனர், உடமைகள் தீயிடப்பட்டன. வீதியெங்கும் புகைமண்டலமாக இருந்தது.

குண்டர்கள் போனபின்பு நாங்கள் வீட்டிற்கு திரும்பி வந்தோம், பின் அதிர்ச்சியடைந்த நிலையில் என் மகளை ஒரு முஸ்லிம் பெண் கூட்டி வந்தார், அவர் குண்டர்களிடமிருந்து என் மகளை காப்பாற்றினார்.

### பொலிஸ் பாதுகாப்பு இல்லை

அன்றிரவு பட்டினி கிடந்தோம். வீட்டுக்கு வெளியில் அன்றிரவு முழுவதும் நித்திரை முழித்திருந்தோம், எங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அஞ்சினோம். பொலிஸாரிடமிருந்து எவ்வித பாதுகாப்பும கிடைக்கவில்லை. உயிரை கையில் பிடித்துக்கொண்டு 23-ம் திகதி அதிகாலை 4 மணிக்கு பம்பலப்பிட்டியிலுள்ள புதிய கதிரேசன் கோவில் முகாமிற்குச் சென்றோம், அங்கிருந்து யாழ்ப்பாணம் 23 ம் திகதி கப்பல் மூலம் வந்தோம்.

நான் கொழும்பு கூட்டுறவு மொத்த விற்பனவுநிலையத்தில் கடமையாற்றினேன். சில்லறை இலாகா களஞ்சிய கட்டுப்பாட்டு பிரதம லிதகிராகக் கடமையாற்றினேன். நான் எனது நேரடி மனேசருக்கு எனக்குநடந்த கதியை ஆகஸ்ட் 30ம் திகதி பதிவுக் கடிதம் மூலம் அறிவித்தேன். கொழும்பிலுள்ள காரியாலயத்தில் தொடர்ந்து வேலைசெய்ய முடியாத நிலையை விளக்கி மற்றொரு கடிதம் எழுதி யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் தரும்படியும் கூறினேன்.

### மாற்றம்கேட்ட எனக்கு நேர்ந்த கதி

எனது விண்ணப்பங்களைப் பற்றி அவர்கள் அக்கறை எடுக்கவில்லை. வேலை நீக்க

(5-ம் பக்கம் பார்க்க)


## தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ளவர்களும், நெசவு வேலை பழகவிரும்பும் பெண்பிள்ளைகளும் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும், தங்கும் வசதிகளுமுண்டு விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்றிஸ் 42 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8642.



## மரண அறிவித்தல்

### வசாவிளான் சி. ஆ. சண்முகம்

முன்னைநாள் பருத்தித்துறை பஸ்கம்பனி உரிமையாளர் வசாவிளான் திரு. சி. ஆ. சண்முகம் (சாமி தம்பையா) அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமைக்கிரியை 4-3-1978 சனியன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்கள், உறவினர்கள் யாவருக்கும் எமது நன்றி.

குடும்பத்தினர்.

8690



## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா செல்லக்கண்ணு

யாழ்ப்பாணம் 60, சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த திருமதி. நடராசா செல்லக்கண்ணு காலமானார். இவர் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், கந்தசாமி, கதிர்காமநாதன் (தேசிக்காய் மார்க்கட் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயும், மகேந்திரனின் (இ. போ. ச. கிளிநொச்சி) மாமியும் குமாரசாமியின் (தேர்தல் அலுவலகம் வவுனியா) சின்னம்மாவுமாவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் இன்று (6-03-78) திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரிகைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

8692


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 65 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu Telephone 389. Registered as a Newspaper in Srilanka.